யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
முதலாம் தவணைப் பரீட்சை
தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல்

தரம்: 10 **நேரம் 3 மணித்தியாலம்**

பகுதி I

கவனிக்க:
1. எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
2. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1,2,3,4 என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
3. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

1) பின்வருவனவற்றில் எது விரல் அடையாளத்தை வாசிக்கும் பொறியில் தரவாகப் பயன்படுத்தப்படுகிறது?
   1. தயார் செய்தல்
   2. செல்கை நேரம்
   3. கைரேகை
   4. வருகை நேரம்

2) பின்வருவனவற்றில் அரசாங்கத்திலிருந்து தொழிலார்களுக்கு வழங்கப்படும் சேவை எது (G2E)
   1. வங்கித் தகவல்
   2. வர்த்தமானிகள் மற்றும் சுற்றுநிருபங்கள்
   3. தானிகர் அலுவலகங்களும் விசா வசதிகளும்
   4. வியாபரங்கள் மற்றும் வியாபார பதிவுகள்

3) LMS இன் விரிவாக்கம் யாது?
   1. Learning Material Shop
   2. Learn Music System
   3. Learning Management System
   4. Learning Material System

4) தகவலின் இயல்பு அல்லாதது எது?
   1. துல்லியம்
   2. அளவு
   3. பொருத்தம்
   4. காலத்திற்கு பொருத்தமாயிருத்தல்

5) தொலை மருத்துவத்தின் சேவை அல்லாதது?
   1. தொலை சிகிச்சை பராமரிப்பு
   2. இலத்திரனியல் முன்பதிவு
   3. வீட்டிலிருந்து சிகிச்சை
   4. தொலைப்பயிற்ச்சி

6) ஒரு பெரிய பண்ணையில் விலங்குகளின் இருப்பிடத்தைக் கண்டறியப் பயன்படும் சாதனம் எது?
   1. CCTV 2. RFID 3. ETU 4. EEG

7) தன்னியக்கத் தொடரி கட்டுப்பாட்டு கணிப்பானை கண்டுபிடித்தவர் யார்?
   1. Gottfried Wilhelm
   2. Joseph Jacquard
   3. Charles Babbage
   4. Howard Aiken

www.lkedu.lk

8) உலகின் முதலாவது பொறிமுறைக் கணிதச் செய்கைகளைச் செய்யும் உபகாரணமாக கருதப்படுவது?

1. Abacus 2. Adding machine 3. Punch card 4. Analytical Engine

9) மைய முறைவழியாக்கின் (CPU) கூறுகள் யாவை?

1. கட்டுப்பாட்டு அலகு, எண்கணித தர்க்க அலகு, உள்ளீட்டு அலகு.
2. வெளியீட்டு அலகு, எண்கணித தர்க்க அலகு, நினைவக அலகு.
3. கட்டுப்பாட்டு அலகு, எண்கணித தர்க்க அலகு, நினைவக அலகு.
4. கட்டுப்பாட்டு அலகு, நினைவக அலகு, வெளியீட்டு அலகு.

10) மூன்றாம் தலைமுறையில் பயன்படுத்தப்படும் வன்பொருள் தொழில்நுட்பம்

1. வெற்றிடக் குழாய்கள்
2. திரான்சிஸ்டர்கள்
3. ஒருங்கிணைந்த சுற்றுகள்
4. முறைவழியாக்கம்

11) கணினிகளின் பரிணாம வளர்ச்சியுடன் அதிகரித்த செல்லும் அம்சம் யாது?

1. அளவு
2. மின்சார நுகர்வு
3. செயலாக்க வேகம்
4. வெப்ப உற்பத்தி

12) கணினிகளை தொழிநுட்பத்திற் வகைப்படுத்துவது தொடர்பான சரியானது?

1. நுண்கணினிகள்
2. சிறுகணினிகள்
3. ஒத்திசைக் கணினிகள்
4. மீக்கணினிகள்

13) உள்ளீட்டுச் சாதனங்களை மட்டும் கொண்ட தொகுதி யாது?

1. அச்சுப்பொறி , சுட்டி , சாவிப்பலகை
2. ஒளியியல் பேனா , சுட்டி , சாவிப்பலகை
3. சாவிப்பலகை, சுட்டி, கணினிதிரை
4. அச்சுப்பொறி, ஒலிபெருக்கி , பல்லூடக எறிவை

14) பின்வருவனவற்றுள் உள்ளீடாகவும் வெளியீடாகவும் தொழிற்படக்கூடிய சாதனம் எது?

1. ஒலிபெருக்கி
2. நுணுக்குப்பண்ணி
3. தொடுதிரை
4. சுட்டி

15) காசோலையின் செம்மையை சோதிக்க பின்வரும் சாதனங்களில் எது பயன்படுத்தப்படுகிறது?

1. OCR 2. MICR 3. OMR 4. ATM

16) பின்வருவனவற்றில் எது அரைஇரு வழிப்போக்கு முறைக்கு உதாரணமாகும்.

1. அச்சுப்பிரதிகளைப் பெறுதல்
2. இணையத்தினூடாக தகவல் பெறுதல்
3. தொலைபேசி உரையாடல்
4. தொலைக்காட்சி பார்ப்பது

www.lkedu.lk

LEARNEASY

KNOWLEDGE IS POWER

தமிழ் & English Medium

தரம் 01 முதல் A/L

வரையான வகுப்புக்கள்

ZOOM ஊடாக நடைபெறுகின்றன



தரம் 01 முதல் 05 வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- சுற்றாடல்
- நுண்ணறிவு
- வினாத்தாள் வகுப்பு
- பேச்சு ஆங்கிலம்
- பேச்சு சிங்களம்



தரம் 06 முதல் O/L வரை

- தமிழ்
- கணிதம்
- ஆங்கிலம்
- விஞ்ஞானம்
- வரலாறு
- வர்த்தகம்
- ICT
- English Literature
- தமிழ் இலக்கியநயம்
- சுகாதாரம்
- புவியியல்
- குடியியல்

76667-4945

17) பின்வருவனவற்றில் எது ஒரு அழுத்தா அச்சுப்பொறிக்கான எடுத்துக்காட்டாகும்.

1. வரி அச்சுப்பொறி
2. வெப்ப அச்சுப்பொறி
3. டெய்சி வீல் அச்சுப்பொறி
4. புள்ளி அமைவுரு அச்சுப்பொறி

18) பின்வருவனவற்றில் எவ் அச்சுப்பொறி தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தில் இருந்து பற்றுசீட்டுகளைப் பெற பயன்படுகிறது?

1. வெப்ப அச்சுப்பொறி
2. அழுத்தச்சுப் பொறி
3. மைத்தாரை அச்சுப்பொறி
4. புள்ளி அமைவுரு அச்சுப்பொறி

19) பின்வருவனவற்றில் எது ஒரு அழிதகு நினைவகத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

1. தற்போக்கு பெறுவழி நினைவகம்(RAM)
2. இறுவெட்டு(CD)
3. வாசிப்பு மட்டும் நினைவகம்(ROM)
4. வன்வட்டு(Hard disk)

20) குறைந்த கொள்ளளவுடைய சேமிப்பு சாதனம் எது?

1. வன்வட்டு
2. இறுவெட்டு
3. இலக்கமுறை பல்திறவாக்கல் வட்டு (DVD)
4. நெகிழ்வெட்டு(Floppy disk)

21) கணினியுடன் ஒரு விசைப்பலகையை இணைக்கப் பயன்படுத்தப்படும் துறை

1. PS/2 துறை
2. HDMI துறை
3. RJ/45 துறை
4. VGA துறை

22) நவீன தொலைபேசி வலையமைப்புக்களில் எவ் வகையான ஊடகம் பயன்படுத்தப்படுகிறது?

1. ஒளியியல் நார்கள்
2. நுண்ணலைகள்
3. பரிசையிடாத முறுக்கிய கம்பிச் சோடி
4. செங்கீழ் கதிர்கள்

23) பின்வரும் தரவு பரிமாற்ற ஊடகங்களில் எது Bluetooth இல் பயன்படுத் தப்படுகிறது?

1. பரிசையிடாத முறுக்கிய கம்பிச் சோடி
2. ஓரச்சு வடம்
3. நுண்ணலைகள்
4. வானொலி அலைகள்

24) பின்வருவனவற்றில் எது தரவுத்தொடர்பாடலில் பண்பேற்றம் மற்றும் பண்பிறக்கம் ஆகியவற்றைச் செய்வது

1. வலையமைப்பு இடைமுக அட்டை
2. செய்மதி
3. ஆளி
4. மோடம்

www.lkedu.lk


25) ஒரு அலுவலகத்தில் நிறுவத்தக்க சிறந்த வலையமைப்பு யாது?

1. LAN
2. MAN
3. WAN
4. மேலே உள்ள எதுவும் இல்லை

26) LAN இல் பயன்படுத்தக்கூடிய சிறந்த வலையமைப்பு இடைத்தியல் எது?

1. பாட்டை(Bus)
2. உடு (Star)
3. வளைய(Ring)
4. மேலுள்ள யாவும்

27) படத்தில் காட்டப்பட்டுள்ள வலையமைப்பு இடைத்தியல் எது?



1. பாட்டை(Bus)
2. உடு (Star)
3. வளைய(Ring)
4. மர(Tree)

28) கணினியில் தரவுகளை சேமிக்க பயன்படும் மிகச்சிறிய அலகு எது?

1. a byte
2. a nibble
3. a bit
4. a block

29) முறைவழியாக்கத்தின் கதி (clock speed) அளக்கப்படும் அலகு யாது?

1. MB
2. GB
3. Kps
4. GHz

30) பின்வருவனவற்றில் எது ஒரு ரெறா பைட்டின் (TB)அண்ணளவு பெறுமானமாகும்?

1. 1x106 MB
2. 1x106 GB
3. 1x106 KB
4. 1x106 bytes

31) பின்வருவனவற்றில் எது தரவுபெறுவழிக்கதி அடிப்படையில் சாதனங்களின் ஏறுவரிசையை சரியாகக் காட்டுகிறது?

1. CD, Hard disk, RAM, Cache
2. RAM, Cache, CD, Hard disk,
3. Cache, RAM, Hard disk, CD
4. Hard disk, , Cache, RAM, CD,

32) பின்வரும் எண்களில் எண்ம எண் யாது?

1. A675
2. 563
3. 831
4. 982

33) இரும 110101_2 எண்ணிற்கு சமவலுவான தசம என்ன யாது?

1. 48_{10}
2. 50_{10}
3. 53_{10}
4. 52_{10}

34) தசம எண் 120_{10}க்கு சமவலுவான எண்ம என்ன யாது?

1. 1111000_2
2. 160_8
3. 76_{16}
4. 101111_2

35) பின்வரும் எண்களில் எது குறைந்தபட்ச மதிப்பைக் கொண்டுள்ளது?

1. 101101_2
2. 36_8
3. $2F_{16}$
4. 48_{10}

36) 001.10001 என்ற எண்ணின் மிகக் குறைந்த பொருளுடைய பிட் (LSB) மற்றும் மிகக் கூடிய பொருளுடைய பிட் (MSB) முறையே யாது?

1. 0, 0
2. 0, 1
3. 1, 0
4. 1, 1

37) பின்வரும் எண்களில் எது பதினறும எண் $7A_{16}$ற்கு சமவலுவானது ?

1. 1101010_2
2. 172_8
3. 124_{10}
4. 74_{10}

38) பின்வரும் எண்களின் ஏறுவரிசைப்படுத்தலை சரியாக காட்டுவது.100011_2, 54_{10}, 76_8, $3F_{16}$?

1. $3F_{16}$, 76_8 , 100011_2 , 54_{10}
2. 100011_2 , 76_8 ,$3F_{16}$, 54_{10}
3. 54_{10}, 76_8, 100011_2 , $3F_{16}$
4. 100011_2 , 54_{10}, 76_8, $3F_{16}$

www.lkedu.lk

THE PIONEER IN ONLINE CLASSES

LEARN EASY
KNOWLEDGE IS POWER

தரம் 10

2026

புதிய பிரிவு

பிரிவு 2

தமிழ்
திங் : 8PM
வியா : 8PM
வெள் : 8PM

கணிதம்
செவ் : 9PM
வெள் : 9PM
சனி : 9PM

விஞ்ஞானம்
புத : 8PM
வெள் : 7PM
சனி : 5AM
ஞாயி : 6AM

வரலாறு
செவ் : 8PM
வெள் : 6PM

வர்த்தகம்
புதன் : 7PM
சனி : 7PM

ENGLISH
Wed : 9PM
Thur : 9PM

ICT
Mon : 7PM
Thur : 7PM
Sun : 8PM

zoom

76667-4945

தமிழ் இலக்கியநயம்
திங்கள்
9 PM - 10 PM
ஞாயிறு
7 PM - 8 PM

English Literature
Tue
6 PM - 8 PM
Wed
7 PM - 8 PM

39) பின்வரும் BCD (இரும குறிமுறை பதின்மம்) மதிப்புகளில் மிகப்பெரியது எது?

1. 01010100 2. 10010101 3. 10010001 4. 00110100

40) 'c' ஆனது ASCII பெறுமதியில் 1100011 வகைகுறிக்கப்படுமாயின் 'f' ஆனது வகைக்குறிக்கப்படும் பெறுமானமாக அமைவது .

1. 1110100 2. 1101011 3. 1101011 4. 1100110

பகுதி II

முதலாம் வினா உட்பட ஏனைய நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக .
முதல் வினாவுக்கு 20 புள்ளிகளும் , மற்றைய வினாக்களுக்கு தலா 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

1)

1. நீங்கள் அங்காடி ஒன்றில் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு கடனட்டை / வரவட்டை பயன்படுத்தியுள்ளீர்கள் எனின். மேற்கண்ட செயல்பாடுகளுக்கான உள்ளீடு, செயல்முறை மற்றும் வெளியீட்டை எழுதுங்கள்.
2. போக்குவரத்துத்துறையில் ICT பயன்பாட்டிற்கான இரண்டு உதாரணங்களை தருக?
3. தொலை மருத்துவம் என்றால் என்ன?
4. கணினியின் சிறப்பியல்புகள் இரண்டு தருக?
5. ஒளியியல் சாதனங்களுக்கு இரண்டு உதாரணங்கள் தருக?
6. ஒத்திசைக் கணினிகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக
7. கீழே தரப்பட்டுள்ள எண்களின் அதிக பொருளுடைய இலக்கங்கள் (MSD) மற்றும் குறைந்த பொருளுடைய இலக்கங்கள் (LSD) ஆகியவற்றை எழுதுக.
   i) 054.2300
   ii) 0.07630
8. பின்வரும் சேமிப்பக சாதனங்கள் வெவ்வேறு கொள்ளளவுகளைக் கொண்டுள்ளன. கொள்ளளவுகள் அதிகரிக்கும் திறனுக்கு ஏற்ப எழுதுக .
   (தொடர்புடைய எழுத்தை மட்டும் குறிப்பிட்டால் போதுமானது.)
   (a) சிமிட்டு நினைவகம் (Flash Memory)
   (b) பதுக்கு நினைவகம் (Cache Memory)
   (c) காந்த ஊடகச் சாதனம் (Magnetic Tape)
   (d) பதிவேட்டு நினைவகம் (Register Memory)
9. கணினித் துறைகளுடன் தொடர்புடைய A – E என பெயரிடப்பட்ட பின்வரும் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன பட்டியலிலிருந்து பொருத்தமான துறைகளின் பெயரை எழுதவும். (பதிலை இந்த வடிவத்தில் எழுதவும் (முகப்படையாளம் - தொடர்புடைய துறையின் பெயர்

www.lkedu.lk

(USB, RJ45, Audio port, PS2, VGA)

A	வலையமைப்பு மூலம் இணையத்தை அணுகுதல்	
B	இலக்கமுறைக் கமராவை கணினியுடன் இணைத்தல்	
C	பல்லூடக எறிவையைப் பயன்படுத்தி கற்பித்தல்	
D	தலைப்பன்னியைப் பயன்படுத்தி இசையைக் கேட்டல்	
E	பழைய பதிப்பு சுட்டியை கணினியுடன் இணைத்தல்	


10. மின்-அரசாங்கத்தால் வேறு அரசாங்கங்களுக்கு வழங்கப்படும் இரண்டு சேவைகளை எழுதுங்கள்.

(10*2=20marks)

2)

1. பின்வரும் அச்சுப்பொறிகளை அழுத்தாஅச்சுப்பொறிகள் மற்றும் அழுத்தும் அச்சுப்பொறிகள் என வகைப்படுத்தி எழுதவும்
   i) Line Printer
   ii) Inkjet Printer
   iii) Thermal Printer
   iv) Dot Matrix Printer
2. அழிதகு நினைவகங்களிற்கு இரண்டு உதாரணம் தருக?
3. துணை நினைவகங்களை மூன்று முக்கிய வகைகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவற்றில் இரண்டைக் குறிப்பிட்டு ஒவ்வொன்றிற்கும் ஒரு உதாரணம் எழுதவும்.
4. பின்வரும் கூற்றுகளுக்கான உபகரணங்களின் பெயரை எழுதுக.
   i) இதயத் துடிப்பை அவதானிப்பதற்கு
   ii) மூளையின் தொழிற்பாட்டை பதிவு செய்தல்
   iii) இதயத்தின் தொழிற்பாட்டைக் கணினி திரையில் காண்பித்தல்
   iv) உடலின் உட்பகுதிகளை முப்பரிமாண முறைப்படி படமெடுத்தல்
5. நிகழ் நிலை அங்காடியின் நன்மைகள் இரண்டு தருக? (5*2=10marks)

3) கணினி தொகுதி வரைபடத்தைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளிக்கவும் கணினியின் செயல்பாடு கீழே விவரிக்கப்பட்டுள்ளது. வெற்றிடங்களில் உள்ள எண்களுக்கு ஒத்த சொற்களைத் அடைப்புக்குறிக்குள் இருந்து தேர்ந்தெடுக்கவும்.



www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

ICT

Grade 6 to O/L

zoom



76667-4945

BY : A.Nivethika

Grade 6

Wed:6PM

Fri:6PM

Grade 7

Fri:7PM

Sun:7PM

Grade 8

Wed:8PM

Sat:8PM

Grade 9

Mon:9PM

Thur:9PM

Grade 10

Mon:7PM

Thur:7PM

Sun:8PM

Grade 11

Tue:8PM


Wed:7PM


Fri:8PM


1. ..... (1) ..... ஆல் உள்ளிடப்பட்ட தரவு மற்றும் வழிமுறைகள் முதலில்
..... (2) ..... க்கு அனுப்பப்படுகின்றன.
அந்தத் தரவு செயலாக்கத்திற்காக ..... (3) ..... க்கு அனுப்பப்படுகிறது.
இது ..... (4) ....., ... (5) ..... மற்றும் நினைவகப் பதிவேடுகள்
எனப்படும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.
..... (3) ..... ஆல் செயலாக்கப்பட்ட தரவு மற்றும் வழிமுறைகள், ... (2) .....
க்கு தகவலாக அனுப்பப்படுகின்றன.
இங்கு தகவல் ..... (6) ..... ஆல் வெளியிடப்படுகிறது
மேலும் ..... (7) ..... தகவல்களைச் சேமிக்கப் பயன்படுத்தலாம்.
..... (5) ..... கணினியுடன் இணைக்கப்பட்ட வன்பொருளைத் தொடர்பு
கொள்கிறது, கையாளுகிறது மற்றும் கட்டுப்படுத்துகிறது.
[கட்டுப்பாட்டு அலகு, முதன்மை நினைவகம், உள்ளீட்டு சாதனங்கள், மைய
முறைவழி அலகு, வெளியீட்டு சாதனங்கள்
துணை நினைவகம், எண்கணிதம் மற்றும் தருக்க அலகு] [7marks]

2. A, G, F ஒவ்வொரு உதாரணம் தருக? [3marks]

4) தரவு பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் சில ஊடகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.


A


B


C


D

1. தொடர்புடைய முகப்படையாளங்களுக்கு ஊடகங்களின் பெயரை எழுதுக
2. பின்வரும் விடையத் தலைப்பிற்கு பொருத்தமான படங்களின் பெயரினை விடையத்தலைப்பிற்க்கு எதிரே எழுதவும்.

விடையத் தலைப்பு

1) இது வேகமான தரவு பரிமாற்ற ஊடகம்
2) இது மிகவும் இலாபகரமான ஒரு தரவு பரிமாற்ற ஊடகம்
3) தரவுகளை ஊடுகடத்தும் போது ஒளி தெறிப்படைந்து ஊடுகடத்தப்படுவதாகும்.
4) நெடுந் தூரத்திற்கு தரவு (100 மீற்றருக்கு அப்பால்) ஊடுகடத்த பொருத்தமற்றது

www.lkedu.lk

5) செப்புக்கம்பி வலை போன்ற ஒரு புற வடம் மைய வடத்தைச் சுற்றி மின் காந்தவியல்பை உண்டாக்குகிறது.
6) இது பாதுகாப்பான சிறந்த தரத்தைக் கொண்ட தரவு பரிமாற்ற ஊடகம்..

3. நுண்ணலையில் (microwave) காணப்படக்கூடிய இரண்டு சிறப்பு இயல்புகளை தருக?
4. செங்கீழ் கதிர்கள் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்று தருக?

[4, 3, 2,1]

5)

1. ஒரு வலையமைப்பு இடைத்தியல் வரைபடத்தை வரைந்து, ஒரு ஆளி , மூன்று கணினிகள் மற்றும் ஒரு அச்சுப்பொறியை இணைக்கவும். (ஆளி, கணினி 1, கணினி 2, கணினி 3 மற்றும் அச்சுப்பொறி என்ற முகப்படையாளங்களை (labels) பயன்படுத்தவும்)
2. மேலே உள்ள வலையமைப்பு இடைத்தியலில் ஆளிக்கு பதிலாக குவியம் மாற்றப்பட்டிருந்தால், ஏற்படும் தீமைகளை இரண்டு எழுதுக?
3. வலையமைப்பை தொடுக்கும் இரண்டு சாதனங்களை எழுதுக?
4. வலையமைப்பாகத்தின் நன்மைகளை இரண்டு தருக?
5. கணினி வலையமைப்பின் மூன்று வகைகளையும் எழுதுக?

[3,2,2,2,1]

6)

1. H என்ற எழுத்தின் ASCII பெறுமதி தசமத்தில் 72 ஆக இருந்தால், "NO" என்ற வார்த்தைக்கான ASCII குறியீட்டை தருக?
2. பின்வரும் எண்ம எண் 742_8 இரும மற்றும் பதினறும எண்களாக மாற்றுக? (படிமுறைகளை எழுதுக)
3. தரப்பட்ட பதினறும எண்களை இரும எண்ணாகளாக மாற்றுக
   i) A45
   ii) B5C9
4. கீழே தரப்பட்ட அட்டவணையையிலுள்ள குறியீட்டு முறைமைகளில் பயன்படுத்தப்படும் பிற்றுகளின் எண்ணிக்கை, குறியீடுகளின் எண்ணிக்கை என்பவற்றை தருக? (அட்டவணையை விடைத்தாளில் பிரதிசெய்து நிரப்பவும்)

குறியீட்டு முறை	பிற்றுகளின் எண்ணிக்கை	குறியீடுகளின் எண்ணிக்கை
BCD		
ASCII		
EBCDIC		
Unicode		

[2,2,2,4]

www.lkedu.lk